**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 362/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | திருமதி. ஜெரினாபேகம் |
| Father's Name/Husband Name: | திரு. அப்துல்ஹக்கீம் |
| Village : | குரும்பலூர் |
| Taluk : | பெரம்பலூர் |
| Age : | 54/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 08.06.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி சம்சாத் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது குரும்பலூர் கிராமத்தில் வசித்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு பாடாலூர் கிராத்தில் உள்ள உறவினர் வீட்டிற்கு காலையில் நான் எனது கணவர் மற்றும் உறவினர்களுடன் எங்களது வீட்டை பூட்டி விட்டு சென்றுவிட்டேன். மதியத்திற்கு மேல் வீட்டிற்கு வந்த போது வீட்டின் கதவிலிருந்து பூட்டு உடைக்கப்பட்டு இருந்தது. வீட்டிற்குள் சென்று பார்த்தபோது பீரோ திறந்து கலைக்கப்பட்டிருந்தது. பீரோவில் வைத்திருந்த நகைகள் திருட்டு போயிருந்தது.

பீரோவில் நான் வைத்திருந்த தோடு, நெக்லஸ் மற்றும் மாட்டல் ஆகியவை திருட்டு போயிருந்தது சுமார் 4 1/2 பவுன் இருக்கும். அதன் மதிப்பு சுமார் 70,000 ரூபாய் மதிப்பு இருக்கும். இது குறித்து எனது அக்கா மகன் நாசரிடம் சொன்னேன். போலிசார் தகவல் தெரிந்து வீட்டிற்கு வந்தார்கள். இது குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **புகார் அ.சா.ஆ1 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது**. நான்கு மாதங்கள் கழித்து எங்கள் வீட்டில் திருட்டு போன நகைகளை கண்டுபிடித்ததாக போலிசார் சொன்னதின் பேரில் நான் காவல் நிலையம் சென்று நகைகளை அடையாளம் காட்டினேன். மேற்படி நகைகள் நீதிமன்றத்தில் மனுப்போட்டு பெற்றுக் கொண்டேன்.

என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகைகள் தான் எங்கள் வீட்டில் திருட்டுப்போனது. மேற்படி **புகைப்படும் அ.சா.ஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. நகைகளை யார் திருடினார்கள் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது வீட்டில் திருடு போனது சம்மந்தமாக யார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னிடம் கையெழுத்து வாங்கிய புகாரில் என்ன எழுதியுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு வந்த போலிசார் சம்பவயிடத்தில் உடைக்கப்பட்டிருந்த பூட்டினை கைப்பற்றினார்களா என்றால் இல்லை.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.